பக்கங்கள் 15 + 5

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 08 | செவ்வாய்க்கிழமை | 24.09.2024 | அதிர்வு 54

## நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார்

**ஐ.தே.க. தெரிவிப்பு**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டார் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# புதிய பிரதமராக ஹரினி பதவியேற்பு! புதிய அமைச்சரவையும் நியமனம்!!

## நான்கு பேரிடையே அமைச்சுகள் பகிர்ந்தளிப்பு

**புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவினால் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.**

**இந்த அமைச்சரவைப் பதவியேற்பு நிகழ்வு இன்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.**

**அதற்கமைய, புதிய பிரதமராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.**

அவர் இலங்கையின் பிரதமராகப் பதவியேற்கும் மூன்றாவது பெண் ஆவார்.

இதற்கு முன்னதாக உலகின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார 04

# கிழக்கு ஆளுநரும் இராஜினாமா!

## 9 மாகாணங்களுக்கும் விரைவில் புதிய ஆளுநர்கள்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அத்துடன் மத்திய, வடமேல், வடமத்திய, ஊவா, சப்ரகமுவ, தென், வடக்கு மற்றும் மேல் ஆகிய மாகாணங்களின் ஆளுநர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இந்நிலையில், 9 மாகாணங்களுக்கும் விரைவில் புதிய ஆளுநர்களைப் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமிக்கவுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.




# பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி கொக்கட்டிச்சோலையில் ஏர்பூட்டடல்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய ஏர் பூட்டு விழா இன்று (24) செவ்வாய்க்கிழமை விழாக் குழுத் தலைவர் க.சிவகுருநாதன் தலைமையில் பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி கோலாகலமாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு. கு. சச்சிதானந்த குருக்கள், ஆலய குரு சிவஸ்ரீ வ. ஜோதிலிங்க குருக்கள் ஆசியோடு நிகழ்வு ஆலய வயலில் ஆரம்பமானது.

நிகழ்வில் அதிதிகளாக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், பட்டிப்பளை பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் கலாபூஷணம் ஞானபேரின்பம் ஆகியோர் கலந்து கொண்டனர்.


ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்களான இ . மேகராசா (தலைவர்), சி.கங்காதரன்(செயலாளர்), ச. கோகுலகிருஷ்ணன் (பொருளாளர்) ஆகியோர் ஏர் பூட்டு விழாவை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சிவ.அகிலேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்களும் விவசாயப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.









EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண அநுரகுமாரவின் வெற்றி வழிவகுக்க வேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள தோழர் அநுரகுமார திஸாநாயக்க புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கண்டு நாட்டை சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் முன்கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடதுசாரித் தலைவரான அநுரகுமார திஸாநாயக்கவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:-

"இலங்கையில் முதன்முறையாக மார்க்சிய லெனினிய சிந்தனையைக் கொண்ட இடதுசாரிக் கட்சியொன்றின் தலைவர் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். 56 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று இந்த நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியாக தோழர் அநுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்றுள்ளார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். ஒருபுறம் பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள நாடு. இலஞ்சம் ஊழல். மறுபுறம் முப்பது வருடங்களாக நடைபெற்ற பாரிய யுத்தம். இதனால் ஏற்பட்ட இழப்புகளும் பொருளாதார அழிவுகளும் இவை அனைத்தையும் தீர்த்து வைக்க வேண்டிய ஒரு பொறுப்பிலும் நீங்கள் இருக்கின்றீர்கள்.

இன, மத பேதமில்லாமல் நாமெல்லோரும் இலங்கையர்கள் என்ற வகையில் நாம் செயற்பட வேண்டும் என்றும் நீங்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால், இந்த நாடு நூற்றாண்டு காலமாக இன, மத, மொழி ரீதியாக பிரிந்து போயிருக்கின்றது. பௌத்தத்திற்கு முதலிடம், சிங்களத்திற்கு சிறப்பு அந்தஸ்து, பௌத்தத்திற்கு முதலிடம் என்ற பெயரில் முப்படைகளையும் பயன்படுத்தி தமிழர் பகுதிகளில் புதிய புதிய புத்த விகாரைகளை அமைக்கும் அரசின் செயற்பாடுகள் போன்றவை தொடர்கதையாகத் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில், சமத்துவமோ, புரிந்துணர்வோ எவ்வாறு ஏற்படும் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நாம் நம்புகின்றோம்.

அது மட்டுமன்றி, இந்த நாட்டை பொருளாதார ரீதியாக வளப்படுத்த வேண்டுமாக இருந்தால் அதற்கான சர்வதேச முதலீடுகளை நாங்கள் கொண்டுவர வேண்டுமென நாங்கள் விரும்பினால் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஒன்று ஏற்பட வேண்டும். அந்த அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டுமாக இருந்தால், நீண்டகாலமாக இழுபறி பட்டுக்கொண்டிருக்கும்

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும். இவை இல்லாமல் பொருளாதார முன்னேற்றங்களோ அபிவிருத்தியோ ஏற்படுவது மிகக்கடினமான ஒரு செயற்பாடாகும்.

மார்க்சிய லெனினிய சிந்தனையில் வளர்ந்து வந்துள்ள நீங்கள் ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அவர்கள் சுயாட்சியுடன் வாழ்வதற்கான அடிப்படைகளையும் மற்றவர்களைவிட தெளிவாகப் புரிந்திருப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம். ஆகவே, அந்தவகையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் துணையாக இருப்போம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஜனநாயக ரீதியில் முதன்முறையாக ஒரு இடதுசாரிக் கட்சியாக நீங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருக்கின்றீர்கள். ஆகவே, அந்தவகையில் நீண்டகாலமாக இழுபறிபட்டுக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நீங்கள்தான் தகுதிவாய்ந்தவர் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

உங்கள் முயற்சிகளும் சிந்தனைகளும் வெற்றியடைய மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

# சஜித் அணிக்கு ஐ.தே.க. அழைப்பு!

## ரணிலுடன் கூட்டுச் சேரப்போவதில்லை என்று சஜித் அறிவிப்பு

எதிர்வரும் தேர்தல்கள் மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்காக அனைத்து எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பொதுக் கூட்டமைப்பை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



இந்தச் சந்திப்பின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

இதன்படி, எதிர்வரும் தேர்தல்கள் மற்றும் அரசியல் சூழ்நிலைகளை எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் இந்தப் பொதுக் கூட்டணியில் இணையுமாறு அழைப்பு விடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எனினும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தானே பிரதமர் வேட்பாளர் என்றும், தனது கட்சி அதை அங்கீகரித்துள்ளதால் ரணிலுடன் கூட்டுச் சேரப்போவதில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புதிய பிரதமராக...

திஸாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், லக்ஷ்மன் நிபுண ஆரச்சி ஆகிய 4 பேரிடையே அமைச்சுகள் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய அமைச்சரவை இடைக்கால அமைச்சரவை ஆகும். இந்த அமைச்சரவை நியமனத்தையடுத்து இன்று நள்ளிரவுடன் நாடாளுமன்றமும் கலைக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

### நாடாளுமன்றத்...

என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியல் ஊடாகவேனும் அவர் நாடாளுமன்றம் வரமாட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும், நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி மற்றும் கூட்டணியை அவர் வழிநடத்துவார் என்றும் ருவான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிரசார உறுதிமொழி

வாக்குறுதிகளை வாரி வழங்கி, அதிகாரத்துக்கு வந்துவிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு, இது அவற்றை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டிய வேளை.

அந்த வகையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வெளிவராத உண்மைகளை வெளிக் கொணர வேண்டிய கடப்பாடு அவருக்கு உண்டு.

அவ்விடயம் குறித்து விசாரணை நடத்தவும், உண்மைகளை வெளிக் கொணரவும், தேவையான அடித்தளத்தை தயார் செய்வதற்கும், இயன்ற அனைத்தையும் தாம் மேற்கொள்வார் என்று புதிய ஜனாதிபதி தன்னிடம் நேற்று உறுதி கூறினார் என அவருக்கு நேற்றைய தினம் நேரில் ஆசி கூறிய கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் றஞ்சித் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதே சமயம், புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ள - படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லஸந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க, தனது தந்தையின் கொலைக்கு காரணமானவர்களுக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை எடுத்து நீதியை உறுதிப்படுத்துமாறு அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது தந்தை கொடூரமான முறையில் கொல்லப்பட்டு பதினைந்து வருடங்கள் கடந்துள்ள போதிலும், அவரது தந்தைக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவானமை நீதிக்கான நம்பிக்கையை புதுப்பித்துள்ளதாக அஹிம்சா குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தையின் கொலைக்கு மட்டுமல்ல, பிரகீத் எக்னலிகொட காணாமல் போனமை, கீத் நொயார் மற்றும் போத்தல ஜயந்த மீதான தாக்குதல்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட 12 கடத்திச் சென்று கப்பம் கோரிய நிலையில் அவர்கள் காணாமலாக்கப்பட்டமை உட்பட பாதிக்கப்பட்டவர்களின் தீர்க்கப்படாத வழக்குகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் பிரசார உறுதிமொழியை அவர் நினைவுபடுத்தினார்.

இந்த வழக்குகளுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீதியை வழங்குவதில் ஜனாதிபதி திஸநாயக்கவின் தலைமை ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் என அஹிம்சா தனது நம்பிக்கையை அந்தக் கடிதத்தில் வலியுறுத்தினார்.

இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுவதற்கு இன்னும் பல விடயங்கள் காத்திருக்கின்றமையை புதிய ஜனாதிபதிக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இலங்கையில் யுத்தக் கொடூரம் அரங்கேறிய காலத்தின் போது கடத்தப்பட்ட, காணாமலாக்கப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட ஊடகப் பணியாளர்களின் எண்ணிக்கை 43. அதில் பெரும்பான்மைச் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் லஸந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னலிகொட உட்பட நான்கு பேர் மட்டுமே. ஏனைய 39 பேரில் ஒருவர் முஸ்லிம். எஞ்சிய 38 பேர் தமிழர்கள்.

இவர்கள் எவரினதும் மறைவு தொடர்பாகவும் இவ்வளவு நீண்ட காலமாகியும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

நாட்டில் இழைக்கப்பட்ட கொடூரங்கள், அநீதிகள், அடாவடித்தனங்களுக்கு எதிராக நீதி - நேர்மையான விசாரணை நடத்தி, உண்மைகளை வெளிக்கொணர்ந்து, பொறுப்புக்கூறலை நிலை நாட்டுவோம் என்று மேடைக்கு மேடை முழங்கி, பீற்றித் திரிந்து, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் முன்னால் இந்தப் பிரசார உறுதிமொழிகள் நிறைவேற்றப்படக் காத்திருக்கின்றன என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.



# தென்கிழக்கு பல்கலைக்கழக உள்ளக வீதிகள் புனரமைப்பு!

## பணிகள் ஆரம்பித்து வைப்பு

(எம்.வை. அமீர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிதைவடைந்துள்ள உள்ளக வீதிகளை புனர்நிர்மாணம் செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ், இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் முன்பாகவுள்ள வீதியின் புனர்நிர்மாண பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இன்று இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு நிர்மாண பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வின்போது முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஷாகிர், இஸ்லாமிய கற்கைகள் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸ், அரபு மொழித்துறை தலைவர் கலாநிதி ஏ.எம். றாசிக், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வீதியில் கிடந்த தங்க தாலியை உரியவரிடம் ஒப்படைத்த மாணவி

(மஸ்கெலியா)

வீதியில் கிடந்த தங்க தாலி மற்றும் 3 ஆயிரம் ரூபா பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மஸ்கெலியா சென். ஜோசப் தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவி பாலகிருஷ்ணன் அபிநயாவை பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர்'. மஸ்கெலியா சாமிமலை வீதியில் உள்ள அம்மன் ஆலய பகுதியில் உள்ள பிரதான வீதியில் இந்தப் பொருள் கிடந்துள்ளது.

இன்று காலை பாடசாலைக்குச் செல்லம் போது மாணவி அதனை எடுத்துப் பாடசாலை பகுதியில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஜீ.விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்துள்ளார். இது தொடர்பில் பாடசாலை அதிபர் என்.பரமேஸ்வரனிடமும் அறிவித்துள்ளார் மாணவி பி.அபிநயா.

அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எஸ்.புஸப்பகுமார விசாரணை நடத்தி உரியவரிடம் பொருளை ஒப்படைத்துள்ளார்.

நேர்மையான முறையில் நடந்து கொண்ட மாணவி பாலகிருஷ்ணன் அபிநயாவை மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவும் பாராட்டினார்.







# தான் தோன்றீஸ்வரர் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்றுக் காலை பெற்றது.

ஆலயத்தில் காலை 6 மணியளவில் திருப்பொற்சுண்ணம் இடித்து பிரதம குரு சிவஸ்ரீ மு கு. சச்சிதானந்த குருக்கள் ஆலய குரு சிவஸ்ரீ சபாரெத்தினக்குருக்கள் கிரியைகளை நடத்தினார்.பின்னர் சுவாமி ஊர்வலமாக தீர்த்தக்குளத்துக்கு சென்றது.

ஆலயத்திலிருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள "சாமிரவில்லு" என அழைக்கப்படும் தீர்த்தக் குளத்தில் காலை 8 மணி அளவில் சிவன் உறை சிவகாமி விசேட பந்தலில் அபிஷேகம் செய்யப்பட்டு தீர்த்தம் இடம்பெற்றது.அதை தொடர்ந்து பெருந்திரளான பக்தர்கள் தீர்த்தம் ஆடினர்.









# முஸ்லிம் காங்கிரஸ் செயற்பாடுகளில் இளைய தலைமுறைக்கு முன்னுரிமை

## இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடல்

(மாளிகைக்காடு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தேர்தல் செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த இறக்காமம், மாளிக்காடு, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் குழுக்களுடன் விசேட சந்திப்பு இன்று நடைபெற்றது.

கட்சியின் உச்ச பீடத்தின் தீர்மானத்துக்கு அமைவாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்காகக் கடின உழைப்புடன் செயற்பட்ட தேர்தல் குழுக்களுக்கும், இறக்காமம், மாளிகைக்காடு, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த மக்களுக்கும் கட்சியின் தலைவர் சார்பிலும், கட்சி சார்பிலும் இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பல சவால்களை எதிர் கொள்வதற்கான திராணியை வளர்த்துக்கொள்வதுடன் எமது கட்சி செயற்பாடுகளில் புதிய இளைய தலைமுறையினருக்கு முன்னுரிமை வழங்கி கட்சி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டி உள்ளது என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபையின் அமைச்சருமான எம். எஸ். உதுமாலெப்பை, கட்சியின் உச்ச பீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சி. சமால்தீன், கட்சியின் உச்ச பீட உறுப்பினரும், இறக்காம பிரதேச ஜனாதிபதி தேர்தல் குழுவின் தலைவருமான யூ.எல்.ரியாஸ், இறக்காம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம். எல்.முஸ்னி, கிளை தலைவர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் , மாளிகைக்காடு பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.எச். எம்.இஸ்மாயில், நற்பிட்டிமுனை முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் யூ.எல். தௌபிக், மத்திய குழுவின் செயலாளர் ஏ.எஸ்.எம். ஜௌபர், கிளைக் குழுத் தலைவர்களான எம்.எம்.ரியாஸ், பி. எம்.மக்பூல், ஐ.எம்.ரிபான், எம்.ஐ. நிரோஸ், யூ.எல்.பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை வலய புத்தாக்கம் கண்டுபிடிப்புக்கான கண்காட்சி !

(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான சம்மாந்துறை வலயமட்ட போட்டிப் புத்தாக்க கண்காட்சி சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கண்காட்சியை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத், திருமதி நிலோபரா, பி.பரமதயாளன், உதவி கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட கல்வி சார் அதிதிகள் பார்வையிட்டனர்.

சம்மாந்துறை வலய மட்டத்தில் நடத்தப்பட்ட வலய மட்ட புத்தாக்க போட்டியில் பத்து புத்தாக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்ட புத்தாக்க போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் றிஎல். றைஸ்டீன் தெரிவித்தார்.



# களுபோவல வைத்தியசாலையில் தமிழ் பாட 5 ஆம் அணி நிறைவு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்தியசாலையில் கடமை யாற்றும் உத்தியோஸ்தர்கள் மற்றும் ஊழியர்ககளில் தமிழ் மொழி பாட நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.









# தம்பலகாமம் கலைமகள் முன்பள்ளி விளையாட்டு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச தம்பலகாமம் கலைமகள் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

கலைமகள் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வடக்கு வலயக்கல்வி அலுவலகத்தின் ஆரம்ப முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ.விஜயநாதனும் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மங்கல விளக்கேற்றல், கொடி ஏற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, ஆசியுரை, ஒலிம்பிக் தீபம் ஏற்றல், சத்தியப் பிரமாணம் செய்தல் முதலான நிகழ்வுகளைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நிகழ்வின் இறுதியில் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.







# ஐஸ் போதைப் பொருளுடன் அதிரடிப்படையால் ஒருவர் கைது!

(மஸ்கெலியா)

ஐஸ் போதைப் பொருளுடன் ரக்காடு அதிரடி படையினரால் நேற்று (23) மாலை ஒரவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்ய பட்டவர் ரக்காடு கிராமத்தைச் சேர்ந்த 30 வயது உடைய இளைஞர் எனவும் அவரிடம் இருந்து 130 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீடகப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிரடி படையினரால் மீடகப்பட்ட ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபரை நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தேக நபரை ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர் என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# நாளாந்தம் குளவித் தாக்குதல்களால் தோட்டத் தொழிலாளர் பெரிதும் பாதிப்பு

## தோட்டத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

(மஸ்கெலியா )

மலையகத் தோட்டங்களில் பணி புரியும் தோட்டத் தொழிலாளர்கள் மீதான குளவித் தாக்குதல்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதால் தோட்டத் தொழிலாளர்களின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று தோட்டத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை, வடகொடை வடமத்திய கும்புர தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். மலையக தோட்டங்களில் பணிபுரியும் தோட்ட தொழிலாளர்களுக்கு வருடாந்தம் அதிகளவான குளவி கொட்டும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் தோட்டங்களில் குளவி கொட்டுக்கு இலக்காகித் தோட்டத் தொழிலாளர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் தோட்டத் தொழிலாளர் பெண்கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றனர என்று தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மலையக பெருந்தோட்டங்களைச் சேர்ந்த தலவாக்கலை, டயகம, அகரபதன, லிந்துலை, திம்புல, பத்தனை, ஹட்டன், வட்டவளை, மஸ்கெலியா, நோர்வூட், பொகவந்தலாவ, பூண்டுலோயா, நானுஓயா போன்ற பொலிஸ் எல்லைகளுக்கு உட்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தொழிற்சங்க பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

ஒவ்வொரு வருடமும் மலையக தோட்டங்களில் உள்ள நூற்றுக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் குளவி கொட்டால் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், பல்வேறு நோய்களுக்கு நாளாந்த மருந்துகளை உட்கொள்பவர்கள், ஓய்வூதிய வயதை நெருங்கும் தோட்டத் தொழிலாளர்கள் போன்றோரும் குளவி தாக்குதலால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பில் அரசோ பொறுப்பான திணைக்களங்களோ எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை எனவும், குறைந்த பட்சம் தம்மை கடித்தால் கூட எவரும் கண்டுகொள்வதில்லை எனவும் தொழிற்சங்க பிரதிநிதிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

குளவி தாக்குதலுக்கு உள்ளாகும் பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு ஆடைகளை வடிவமைத்து வழங்குவதற்கு பொறுப்பான திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்தால் அது அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் ஆறுதலாக அமையும் என தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.




# புதிய ஜனாதிபதியாக அநுர பதவியேற்பு; மன்னாரில் வெற்றிக் கொண்டாட்டங்கள்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மன்னாரில் நேற்று திங்கட்கிழமை(23) ஆதரவாளர்களால் வெற்றிக் கொண்டாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட கிளையால் வெற்றி கொண்டாட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டு தமது வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடினர்.

இதன் போது அவர் வாக்குறுதி வழங்கிய மன்னார் மாவட்டத்தில் உள்ள சில பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு வழங்க வேண்டும் என கோரிக்கையை முன்வைத்தனர்.

குறித்த நிகழ்வில் ஆதரவாளர்கள பலர் கலந்து கொண்டனர்.

# வசதிகளற்ற முனைக்காடு விவேகானந்தா; மேசைப் பந்தாட்டத்தில் மூன்று சம்பியன்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மேசைப்பந்து விளையாட்டுக்கான எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற மட்டக்களப்பு முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட அணிகள் கிழக்கு மாகாண மட்ட சம்பியன்களானதோடு தேசிய மட்டத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் திருகோணமலையில் இடம்பெற்ற போது மட்டக்களப்பு முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட 18 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளும்,16 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணியும் முதலிடங்களைப் பெற்றுச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் அணி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது.

அத்துடன் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தனிப்பட்ட வீராங்கனைகளுக்கான போட்டியில் இந்தப் பாடசாலை மாணவி எம்.நிவேதிதா சம்பியனானார். 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தனிப்பட்ட ஆண்கள் பிரிவில் கே.சுஜி ரன் இரண்டாமிடத்தையும் பெற் றுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கும் முனைக்காடு விவேகானந்த மகாவித்தியாலயத்துக்கும் முனைக்காடு கிராமத்துக்கும் இவர்கள் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.






# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கிழக்கு சுதேச மருத்துவ சங்கம் வாழ்த்து!

(அபு அலா )

ஜனாதிபதித் தேர்தலில் ஏகோபித்த மக்கள் அபிமானங்களை வென்று, பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்குக் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கம் வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிம்ஸான் அனுப்பி வைத்துள்ள அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



எமது நாடு பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் பல சவாலான இக்கால கட்டத்தில் அரச ஊழியர்களும், பொது மக்களும் தங்களுக்கு வழங்கிய ஆணை மூலம் 9 ஆவது ஜனாதிபதியாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமை சகல இன மக்களின் பாரிய எதிர்பார்ப்பாகும்.

தங்கள் மீது கொண்ட முழுமையான நம்பிக்கையை நிலை நாட்டவும், நாட்டின் சவால்களை வெற்றி கொண்டு சிறந்த இலக்கையும் அடைவீர்கள் என்ற நம்பிக்கையிலேயே ஆகும்.

இந்த எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் வெற்றிகொள்ள உங்களின் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும். அதற்கு எல்லோருக்கும் பொதுவான இறைவனின் ஆசியும், அருளும் கிடைக்க வேண்டும்.

குறிப்பாக, அரச ஊழியர்கள் கடந்த காலங்களில் எதிர்நோக்கி வந்த பொருளாதார ரீதியான சிக்கல்கள் உள்ளிட்ட அரசியல் பழிவாங்கள்கள், பதவியுயர்வு, அவர்களுக்கு முறையாக கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் தாங்கள் அறிவீர்கள்.

அதற்கமைவாக, அவர்களுக்கு சிறந்தொருதீர்வையும்பெற்றுக்கொடுப்பதுடன் தங்கள் மீது முழுமையான நம்பிக்கை வைத்து வாக்களித்த அரச ஊழியர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.



# புதிய ஜனாதிபதி பதவியேற்பையடுத்து சாய்ந்தமருதில் துஆப் பிரார்த்தனை!

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சியின் கீழ், நாட்டில் இன ஐக்கியம், சுபீட்சம் ஏற்பட்டு, வளமான நாடு உருவாகும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட துஆப் பிரார்த்தனை நிகழ்வு நேற்று (23) திங்கட்கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கல்முனை தேர்தல் தொகுதி இணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா உட்பட சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் அடிமட்டப் போராளிகள், இளைஞர்கள், பொதுமக்கள், ஜமா அத்தார்கள் எனப் பலரும் துஆப் பிரார்த்தனையில் ஈடுபட்டு, மனமுருகி துஆ இறைஞ்சினர்.

# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு வாழ்த்துக் கூறிய எடப்பாடி பழனிசாமி



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க வுக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நமது அண்டை நாடான இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுர குமார திஸ ாநாயக்கவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களைப் போல் இல்லாமல் இலங்கை தமிழர்களின் நலனுக்காகவும், தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரின் பிடியிலிருந்து விடுவிக்கும் வகையிலும் புதிய இலங்கை ஜனாதிபதி செயல்பட வேண்டும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன்.- என்றுள்ளது.





# இலங்கையில் கைது செய்யப்படும் மீனவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைக்குக் கோரிக்கை

## மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையில் கைது செய்யப்படும் மீனவர்கள் தொடர்பில் உரிய நடவ டிக்கை எடுக்குமாறு மத்திய வெளி யுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங் கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதி யுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் கைது செய்யப்படும் மீனவர்கள் மீது அதிக அபராதம் விதிப் பதைத் தடுக்கவும் மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்க வும் நடவடிக்கை எடுங்கள்.

கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுங்கள்.

மயிலாடுதுறை மாவட்டம், பூம் புகாரைச் சேர்ந்த 37 மீனவர்கள் இலங் கைக் கடற்படையினரால் கடந்த 21 ஆம் திகதி சிறை பிடிக்கப்பட்டனர். அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் வசூலிப் பதைத் தடுத்திடவும், மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங் கிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தைச் சேர்ந்த 37 மீனவர்கள் பதிவு செய்யப்பட்ட இரண்டு படகுகள் மற்றும் பதிவு செய்யப்படாத ஒரு படகு என மூன்று படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடிக்கும் போது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது.

கைது செய்யப்படும் மீனவர்களிடம், அவர்களது சக்திக்கு மீறிய அபரா தங்களை இலங்கை நீதிமன்றங்கள் விதித்து வருகின்றன. அதோடு, மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அதிகாரிகள் இதுபோன்று கைது செய்வதைத் தடுத் திட உறுதியான நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் .-என்றுள்ளது.

# இலங்கைத் தமிழர்களது 8 முகாம்களில் 830 வீடுகள் கட்ட ரூ.50 கோடி ஒதுக்கீடு!

## திருவண்ணாமலை மாவட்டத்தில் பணிகள் ஆரம்பம்

(திருச்சி
எம். கே. ஷாகுல் ஹமீது)

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 இலங்கைத் தமிழர் முகாம்களில் 830 வீடுகள் கட்டுவதற்கு 50 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் திருவண்ணாமலைக்கு வந்திருந்தார்.

பின்னர் திருவண்ணாமலை மாநகர, செங்கம் சாலை, எமலிங்கம் அருகே இலங்கைத் தமிழர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், அமைச்சர் கே.எஸ். மஸ்தான் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

தமிழகம் முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்கு முதற்கட்டமாக 3,551 வீடுகள் கட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இரண்டாம் கட்டமாக 3,700 வீடுகள் கட்ட உத்தரவிட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 11 இலங்கைத் தமிழர் முகாம்கள் உள்ளன. இவற்றில் 2 முகாம்களில் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.

இந்த ஆண்டு மேலும் 8 முகாம்களில் 830 வீடுகள் கட்ட சுமார் 50 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சில முகாம்களில் வசிப்போருக்கு வீடுகள் கட்ட இடம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தின் அனைத்து முகாம்களிலும் வீடுகள் கட்டும் பணி இந்த ஆண்டு 100 சதவீதம் நிறைவடையும்.- என்றார்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியளர் தெ.பாஸ்கர பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ராம் பிரதீபன், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மணி, திருவண்ணாமலை வருவாய்க் கோட்டாட்சியர் ஆர். மந்தாகினி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சிவா மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 18 பயனாளிகளுக்கு 9 லட்சம் ரூபா மதிப்பிலான கடனுதவிகளை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் வழங்கினார்.

# தமிழக மீனவர் நலனுக்குப் பாதிப்பு ஏற்படாது செயற்பட வேண்டுகிறோம்!

## இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வாழ்த்து தெரிவிப்பு

(திருச்சி
எம். கே. ஷாகுல் ஹமீது)

தமிழக மீனவர்களின் நலனுக்கு பாதிப்பு ஏதும் வராமல் உரிய நடவடிக்கையை இலங்கையின் புதிய அரசு மேற்கொள்ளும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு இலங்கை புதிய ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஜேவிபி தலைவரும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

இலங்கை மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்காக மேற்கொண்ட மாபெரும் மக்கள் போராட்டத்தின் விளைவாக, அரசியலில் முக்கியமான ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு, மக்களின் கல்வி, சுகாதாரம் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்தும் பல இடதுசாரி திட்டங்களை முன்வைத்து தேசிய மக்கள் சக்தி அநுர குமார திஸா நாயக்க தலைமையில் தேர்தல் களத்தைச் சந்தித்தது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஒரு இடதுசாரி வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது ஒரு வரலாற்று சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும்.

நவீன தாராளமய பொருளாதார கொள்கைகள் மூலம் உலகை ஆட்டி படைத்து வரும் ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்து உழைப்பாளி மக்கள் அனுதினமும் போராடி வரும் சூழ்நிலையில் இலங்கையில் இடதுசாரிகள் வெற்றி பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

இம்மகத்தான முறையில் வெற்றி பெற்றுள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்கும், அவருக்கு வாக்களித்த இலங்கை வாக்காளப் பெருமக்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கையின் இன்றைய சவால்களை எதிர்கொண்டு மக்கள் ஒற்றுமை, உழைக்கும் மக்களுக்கான நலன் காக்கும் நல்லாட்சியை நடத்திட அநுர குமார திசாநாயக்க அரசு பாடுபடும் என்று நம்புகிறோம்.

அத்துடன் பறிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சுயாட்சி உரிமைகள், இன, மொழி, சமத்துவம் ஆகியவற்றை உறுதிபடுத்தி இலங்கையில் சிறுபான்மை மக்கள் அனைவருக்கும் சம உரிமைகளை நிலை நாட்டும் அரசாக அநுர குமார திஸாநாயக்க அரசு செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழகத்தில் தொடர்ந்து மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படும் நிலை நீடிக்கும் சூழலில் தமிழக மீனவர்களின் நலனுக்கு பாதிப்பு ஏதும் வராமல் உரிய நடவடிக்கையை புதிய அரசு மேற்கொள்ளும் என விழைகின்றோம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் திருப்பு முனையாக நிகழ்ந்துள்ள மாற்றம் இலங்கையில் உள்நாட்டு அரசியலில் அமைதி, முன்னேற்றம் ஏற்படுத்தும் எனவும் இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் நல்லுறவு வலுப்பட வேண்டும் என்றும் தமிழக மக்களின் விருப்பத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிரொலிப்பதோடு, அநுரகுமார திஸாநாயக்க அரசு வெற்றிப பயணத்தை தொடர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.- என்றுள்ளது.

# இஸ்ரேலில் அதிகரித்துள்ள தாக்குதல் இலங்கையருக்கு எச்சரிக்கை விடுப்பு!

இஸ்ரேலிய இலக்குகள் மீது ஹிஸ்புல்லா ஆயுதக் குழுக்கள் ரொக்கெட் தாக்குதல்களை அதிகரித்துள்ளன. இந்த நிலையில் அங்குள்ள இலங்கையர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தெற்கு லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் உள்ள ஹைஃபா, கலிலி, கோலன் மற்றும் நாசரேத் ஆகிய இடங்களில் வான்வழி ஊடாக பல ஏவுகணை மற்றும் ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

வறண்ட வனப்பகுதிகளில் குண்டுகள் விழுவதால் அந்தந்த பகுதிகளில் தீ பரவ ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது மேற்கொள்ளப்படும் இந்த தாக்குதல்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு சத்தம் எழுப்பப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கையர்கள் அருகில் உள்ள பாதுகாப்பான வீடுகளுக்குச் சென்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### உடல் நலக் குறைவு காரணமாக

# பொது மக்களுடனான சந்திப்புகளை இரத்துச் செய்துள்ள போப் ஆண்டவர்!

போப் ஆண்டவர் பிரான்சிஸ் உடல் நலக் குறைவு காரணமாக தனது பொது மக்களுடனான சந்திப்பை இரத்துச் செய்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

போப் ஆண்டவர் பிரான்சிஸ் (வயது 87) முதுமை காரணமாக உடல்நல பிரச்சினையால் சமீபகாலமாக அவதிப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக அவர் இந்தோனேசியா, பப்புவா நியூ கினியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு 11 நாள்கள் சுற்றுப் பயணம்




மேற்கொண்டுள்ளார்.

இதனை தொடர்ந்து பெல்ஜியம், லக்சம்பர்க் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள அவர் திட்டமிட்டிருந்தார்.

இந்த நிலையில் போப் பிரான்சிஸ்ஸுக்கு திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது மக்களுடனான சந்திப்பை அவர் இரத்துச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "லேசான காய்ச்சல் காரணமாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் வரும் நாள்களில் பயணம் காரணமாகவும், திட்டமிடப்பட்ட பார்வையாளர்கள் சந்திப்பு இரத்து செய்யப்படுகிறது" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஜப்பானின் பதிவாகியுள்ள சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

### அச்சத்தில் மக்கள்

ஜப்பானின் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த நிலநடுக்கமானது ஜப்பானின் தொலை தூர இசு தீவுகளுக்கு அருகே இன்று (24) காலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது 5.6 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இதனை அடுத்து, இசு தீவுகள் மற்றும் ஒகசவாரா தீவுகளை சுனாமி தாக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தத் தீவுகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அச்சத்துடன் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 24/09/2024

## கனடாத் தூதரகம் அநுரவுக்கு வாழ்த்து

ஒன்றாரியோ, செப்ரம்பர் 24
இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகரகம் வாழ்த்து தெரிவித்துள்ளது.
இலங்கையின் 9 ஆவது 02



# மாணவர் அனுமதியில் நுழைவோர் அகதிகள் தஞ்சம் கோரும் போக்கு

### ஆபத்தான நிலைமை என்கிறார் குடிவரவு அமைச்சர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 24
மாணவர் அனுமதியில் கனடாவுக்குள் வரும் சர்வதேச மாணவர்களில் அதிகமான வர்கள் அகதி தஞ்சம் கோருகின்றனர் எனத் தெரியவருகிறது.
இதனை ஒரு 'ஆபத்தான போக்கு' என குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் விமர்சித்தார்.
மாணவர் அனுமதியில் கனடாவுக்குள் அனுமதிக்கப்பட்ட பின்னர் சர்வதேச மாணவர்கள் பலர் கனடாவில் தங்குவதற்காக அகதி தஞ்சம் கோருகின்றனர் என அமைச்சர் கூறினார். 02

# மாகாண லிபரல் கட்சியினரின் ஒன்றாரியோ வருடாந்த மாநாடு

### கடந்த வார விடுமுறையில் நடைபெற்றது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 24
ஒன்றாரியோ, மாகாண லிபரல் கட்சியின் வருடாந்த மாநாடு கடந்த வார விடுமுறையில் நடைபெற்றது.
லிபரல் கட்சி தலைவி பொனி குரோம்பி தலைமையில் இலண்டன் நகரில் இந்த மாநாடு நடைபெற்று முடிந்தது.
கடந்த ஆண்டு இறுதியில் கட்சியின் தலைமைப் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் பொனி குரோம்பி தலைமை தாங்கும் முதலாவது மாநாடு இதுவாகும்.
அவர் தனது உரையின் பெரும் பகுதியை முதல்வர் டக் ஃபோர்ட் தலைமையிலான புரொக்ரசிவ் கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார்.




ஒன்ராரியோ மாகாணத்தில் நிர்ணயிக்கப்பட தேர்தல் திகதிக்கு முன்னதாகவே தேர்தல் நடைபெறும் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் லிபரல் கட்சியின் இந்த வருடாந்த மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.



# உலகத் தலைவர்களுக்கு காத்திருக்கும் பொறுப்பு

## நினைவூட்டுகின்றார் கனடாப் பிரதமர் ட்ரூடோ

ஒன்றாரியோ, செப்ரம்பர் 24

மிகப்பெரிய பொறுப்பொன்று உலகத் தலைவர்களுக்கு காத்திருக்கிறது என ஐ.நாவின் எதிர்கால உச்சி மாநாட்டில் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

ஐ.நா.வின் எதிர்கால உச்சி மாநாடு முதல் தடவையாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ஜஸ்டின் ட்ரூடோ உரையாற்றினார்.

பன்முகத்தன்மையில் இருந்து விலகிச் செல்வது அல்லது தீவிர உலகளாவிய சவால்களை எதிர் கொள்ள வேறுபாடுகளை ஒதுக்கி வைப்பது ஆகியவற்றுக்கு இடையே ஒரு தேர்வு உள்ளது என பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அமைதியான உலகத்தை உருவாக்கும் எதிர்காலத்திற்கான பொறுப்பு உலகத் தலைவர்களுக்கு உள்ளது எனவும் பிரதமர் கூறினார்.

உலக நன்மைக்காக வேறுபாடுகளை புறக்கணிக்க அவர் உலகத் தலைவர்களிடம் தனது உரையில் அழைப்பு விடுத்தார்.

ஜனநாயகத்தை வலுப்படுத்துவது, உலகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, இனப்பெருக்க ஆரோக்கியம் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகலை மேம்படுத்துவது குறித்த புதிய சர்வதேச ஒருமித்த கருத்தை உருவாக்க இந்த மாநாடு உலகத் தலைவர்களை ஒன்றிணைக்கிறது.

### மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் சர்வதேச மாணவர் திட்டத்தை 'கனடாவுக்குள் நுழையும்' வழிமுறையாக பயன்படுத்துகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இந்த சவால் குறித்து தனது அமைச்சு ஆராந்து வருவதாக கூறிய மாரக் மில்லர், இந்தத் திட்டத்தில் மேலும் சீர்திருத்தங்கள் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச மாணவர் அனுமதிப்பத் திரங்களின் எண்ணிக்கையை அடுத்த ஆண்டு 10 சதவீதம் குறைப்பதாக கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்தது.

### கனடாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகராலயம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

பொருளாதார, அரசியல் சீர்திருத்தத்திற்கான முயற்சிகளில் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்திருப்பதாக கனடிய உயர்ஸ்தானிகரகம் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்தது.

இதன் மூலம் அர்த்தமுள்ள, நீடித்த தேசிய நல்லிணக்கத்தை அடைய முடியும் என கனடிய உயர்ஸ்தானிகரகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த வாழ்த்து செய்தியை இலங்கைக்கான உயர்ஸ்தானிகரகம் தமது சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளது.



High Commission of Canada to Sri Lanka and Maldives
Yesterday at 09:24

Congratulations to the new president of #SriLanka, Anura Kumara Dissanayake. Canada looks forward to working together on Sri Lanka's ongoing efforts for economic and political reform and achieving inclusive, meaningful, and lasting national reconciliation.

109 · 2 comments · 8 shares

Like · Comment

Most relevant

Lakmal Madugalle
You are dreaming Mr Ambassador
Welfare state with a minority president will never successful
1d

S.d. Chakrabarti
Glad to hear.
1d



# பாடசாலைக் களப்பயணத்தின் மாணவர்கள் சிலர் பலஸ்தீன ஆதரவுப் பேரணியில் சென்றமை எப்படி?

## ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் சீற்றம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 24

றொறன்ரோ மாவட்டப் பாடசாலை சபை அண்மையில பாடசாலைக் களப்பயணத்தின் சில மாணவர்கள் பலஸ்தீன ஆதரவுக் கோஷங்கள் எழுப்பப்பட்ட பேரணியில் எப்படி கலந்து கொண்டனர் என்பதை விசாரிக்க வேண்டும் என்று ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

இது அவமானகரமானது எனவும், மாணவர்கள் கற்பதற்குப் பதிலாக, றொறன்ரோ மாவட்ட பாடசாலை சபை மற்றும் ஆசிரியர்கள் அவர்களை பாலஸ்தீனியப் பேரணிக்கு கொண்டு வர விரும்புவது அபத்தமானது எனவும் முதல்வர் ஃபோர்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.


வடக்கு ஒன்றாரியோ முதல் குடிகள் பாதரச மாசுபாட்டை முன்னிலைப் படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட கிராஸி நாரோஸ் ரிவர் ரன்னில் கடந்த வாரம் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கலந்துகொண்டனர் என றொறன்ரோ மாவட்ட பாடசாலை சபை தெரிவித்தது.

இந்த களப்பயணம் ஒரு கல்வி அனுபவமாக கூறப்பட்டது, அங்கு



கிராஸி நாரோஸ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி பழங்குடியினரின் குரல்களில் இருந்து மாணவர்கள் அறிந்து கொண்டார்கள்.

இருப்பினும், சமூக ஊடகங்களில் வெளியான காணொலிகள், இந்த மாணவர் குழுவைச் சேர்ந்த சிலர் அணிவகுப்பில் பங்கேற்று, 'ஆமை தீவில் இருந்து பாலஸ்தீனம் வரை, ஆக்கிரமிப்பு ஒரு குற்றம்' என்ற கோஷத்தை மீண்டும் மீண்டும் கூறியதைக் காட்டியது. இந்த விடயம் தொடர்பில் றொறன்ரோ மாவட்ட பாடசாலை சபை மன்னிப்புக் கோரியுள்ளது.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் மாகாணத் தேர்தல் பிரசாரம்

## முழு மும்முரமாக ஆரம்பம்

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 24

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத் தேர்தல் பிரசாரம் ஆரம்பமானது.

இந்த இடைத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ பிரசாரம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

43 ஆவது மாகாணப் பொதுத் தேர்தலுக்கான அழைப்பை லெப்டினன்ட் கவர்னர் ஜெனரட் ஒஸ்டின் வெளியிட்டார்.

இந்த தேர்தல் ஒக்டோபர் 19ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலில் சுகாதார பராமரிப்பு, குற்றம், வீடமைப்பு, பொருளாதாரம் ஆகியன முக்கிய இடம் பிடிக்கின்றன.

இந்தத் தேர்தல் மாகாண முதல்வரும் புதிய ஜனநாயக கட்சியின் தலைவருமான டேவிட் எபி, மாகாண கன்சர்வேட்டிவ் தலைவர் ஜோன் ரஸ்டட் ஆகியோருக்கு இடையில் கடும் போட்டியாக அமையும் என எதிர்வு கூறப்படுகிறது.

பசுமைக் கட்சி சோனியா பர்ஸ்டெனு தலைமையில் தேர்தலை எதிர்கொள்கிறது.



# கறுப்புக் கரடிகளின் நடமாட்டம் நோர்த் பே நகரத்தில் அதிகரிப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 24

கடந்த சில வாரங்களாக நோர்த் பே நகரில் கறுப்புக் கரடிகள் அதிகம் காணப்படுகின்றன என நோர்த் பே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒன்ராரியோவின் இயற்கை வளங்கள் மற்றும் வனத்துறை அமைச்சுடன் இணைந்து, உள்ளூர் சுற்றுப்புறங்களுக்கு கரடிகளை ஈர்ப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு மக்களுக்கு நினைவூட்டுவதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

'பெரும்பாலும் அவை மக்களின் கொல்லைப்புறங்களில் இருக்கும்' என நோர்த் பே பொலிஸ் சேவையின் செய்தித் தொடர்பாளர் டேவிட் வூலி குறிப்பிட்டுள்ளார்.

'எனவே, அவற்றில் பல கரடிகள் குப்பை, பறவை தீவனங்கள் அல்லது பின்புற முற்றங்களில் உள்ள பழ மரங்களை அணுக முயற்சிப்பதை நாங்கள் காண்கிறோம்.' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாக்ஸியை களவாடிய பெண்

கனடாவின் ரொறன்ரோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாக்ஸி ஒன்றை பெண் ஒருவர் களவாடிச் சென்றுள்ளார்.

டாக்ஸியின் சாரதி வாகனத்தை நிறுத்திவிட்டு அதன் சாவியையும் டாக்ஸிலேயே வைத்து விட்டு குப்பைகளை வீசுவதற்காக வெளியே சென்ற போது வாகனத்திற்குள் புகுந்த பெண் அதனைக் களவாடிச் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமது வாகனம் தென்பகுதியை நோக்கி பயணிப்பதை கண்ட சாரதி உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அந்த வாகனத்தைப் பெண் ஒருவர் செலுத்தி செல்லும் காணொளி ஒன்றை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்த பெண் தொடர்பில் மேலதிக விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

வாகனத்தைக் களவாடிய பெண் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஜேர்மன் கருத்தால் கனடாவில் சீற்றம்!

கனடா குறித்து ஜேர்மனி தெரிவித்துள்ள ஒரு கருத்து, கனேடிய அமைச்சர்களைக் கொந்தளிக்கச் செய்துள்ளது.

கனடாவிலுள்ள ஜேர்மன் தூதரகத்தில் ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளித்த ஜேர்மன் தூதரான ஜெனிஃபர் மார்கன், எதிர்காலத்தில், ஜேர்மனியும் ஐரோப்பாவும் கனடாவிடமிருந்து வாங்கும் இயற்கை எரிவாயுவின் அளவு குறைந்துபோகும் என்று கூறினார்.

இயற்கை எரிவாயு சந்தை சுருங்கிப்போகும் என அனைத்து ஆய்வுகளும் தெரிவிக்கின்றன என்று கூறிய ஜெனிஃபர், ஜேர்மனியைப் பொறுத்தவரை, தாங்கள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கிச் செல்கின்றனர் எனவும், தங்கள் எரிவாயுத் தேவை குறைய இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயம்தான் கனடாவைக் கோபமடையச் செய்துள்ளது.

விடயம் என்னவென்றால், கனடா தனது திரவ இயற்கை எரிவாயு தொழில்துறையை விரிவாக்கம் செய்யும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு



வருகிறது.

அப்படியிருக்கும் நிலையில், ஐரோப்பாவின் இயற்கை எரிவாயுத் தேவை குறைந்துபோகும் என்றால், அது கனடாவின் பொருளாதார வளர்ச்சியை பாதிக்குமே!

ஆகவேதான் ஜேர்மன் தூதரான ஜென்ஃபரின் கருத்து கனேடிய அமைச்சர்களைக் கொந்தளிக்கச் செய்துள்ளது.

ஆளாளுக்கு, கீழிறங்கிவந்து ஐரோப்பாவை மோசமாக திட்டத் துவங்கியிருக்கிறார்கள் கனடா அமைச்சர்கள்.